# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

.......கேளுங்கள்,
அப்பொழுது
உங்கள்
சந்தோஷம்
நிறைவாயிருக்கும்படி
பெற்றுக்
கொள்வீர்கள்.

யோவான் 16:24

செய்தி மலர்
2017
செப்டம்பர்

இதழ் : 05
மலர் : 14



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த ஆகஸ்ட் மாதம் முழுவதும் நம்மைக் கண்மனிபோல பாதுகாத்து வழிநடத்தின தேவன் வரும் செப்டெம்பர் மாதத்திலும் அற்புதமாக வழிநடத்துவார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

பக்தனாகிய தாவீது சொன்னான் "ஜெபத்தைக் கேட்கிறவரே மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள்" என்று சங்கீ–65:2

ஆம் பிரியமாணவர்களே! நம் ஜெபத்தைக் கேட்கிற தேவன் நமக்குத் துணையாயிருக்கிறார். நம்முடையத் தேவைகள், கவலைகள், ஏக்கங்கள், விருப்பங்கள், ஆசைகள் எல்லாவற்றையும் ஒரு நண்பனிடம் சொல்லுவதைப் போல நம் தேவாதி தேவனிடத்தில் சொல்லலாம். நம் விண்ணப்பத்தை பிரியமாய் கேட்கிற தகப்பன் இயேசு நமக்கிருக்கிறார். அவர் சொல்கிறார் "கேளுங்கள் உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்" (யோவா–16:24) "என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் நான் அதைச் செய்வேன்" என்று –யோவா–14:14 "அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான் நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன் ஆபத்தில் நானே அவனோடிருந்து அவனை தப்புவித்து அவனைக் கணப்படுத்துவேன். நீடித்த நாட்களால் அவனை திருப்தியாக்கி என் இரட்சிப்பை அவனுக்கு காண்பிப்பேன். (சங்கீ–91:–15,16)

இனிக் கீழ்வரும் பகுதிகளில் தேவ மனிதர்கள் எப்படியெல்லாம் ஜெபித்து ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டார்கள் என்பதை விளக்கமாக பார்க்கலாம்.

## 1.யாப்பேஸ்

யாபேஸின் தாய் அவனைத் துக்கத்தோடு பெற்றெடுத்ததாலே அவனுக்கு யாபேஸ் என்று பெயர் சூட்டினாள். அவனுடைய பிறப்பு அந்தத் தாய்க்கு சந்தோஷத்தைக் கொடுக்கவில்லை அவன் பிறந்தபொழுது அவன் வீட்டிலே வறுமையும், நோய்களும், தீங்குகளும் சூழ்ந்து இருந்தது. அவர்களுக்கு உதவி செய்ய யாருமே இல்லை.

ஆனால் ஒரு வழி அடையும் பொழுது வேறு வழிகளை திறக்கிற கர்த்தர் நம்பிக்கையற்ற சூழ்நிலையில் கடந்து சென்று கொண்டிருந்த அந்தக் குடும்பத்தில் விடி வெள்ளியாக உணர்வுள்ள ஒரு நல்ல மகனாக யாபேஸைக் கொடுத்தார். அவன் கடவுள் பக்தியுள்ளவனாக வளர்ந்தான். எல்லோராலும் உதாசினப்படுத்தப்பட்டிருந்தாலும், யாபேஸ் தேவனை உறுதியாக பற்றிக்கொண்டிருந்தான். கர்த்தர் தன் குடும்பத்தை ஆசீர்வதிப்பார் என்று நம்பி "தேவரீர் என்னை ஆசீர்வதித்து என் எல்லையை பெரிதாக்கி உமது கரம் என்னோடிருந்து தீங்கு என்னை துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கி காத்தருளும் என்று வேண்டிக்கொண்டான்" அவன் வேண்டிக்கொன்டதை தேவன் அருளினார். (1-நாளா-4:9,10) அல்லேலூயா!

என் அன்பு சகோதர, சகோதரிகளே நீங்களும் எல்லாராலும் கைவிடப்பட்டு தனிமையின் பாதையில் தவித்துக்கொண்டிருக்கிறீர்களோ? சரீரத்திலே நோய் வாய்ப்பட்டு கலங்கி கொண்டிருக்கிறீர்களோ? வறுமையினால் வாடி என்ன செய்வது என்று தெரியாமல் போராடிக் கொண்டிருக்கிறீர்களோ? மனங்கலங்காதிருங்கள். யாபேஸைப் போல ஆண்டவரை உறுதியாய் பற்றிக்கொண்டு உங்கள் கவலைகள் எல்லாம் அவரிடம் சொல்லுங்கள் யாபேஸை ஆசீர்வதித்தவர் உங்களையும் ஆசீர்வதிப்பார்.

வேதம் கூறுகிறது "திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம் பண்ணாமல், அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார்" என்று சங்கீ-102:16

## 2.யாக்கோபு

ஒரு பாவமும் அறியாத யாக்கோபு தன் தாய் ரெபேக்காள் சொல்லைக் கேட்டு தன் தகப்பன் ஈசாக்கு கண் தெரியாத நிலையில் ஏமாற்றி தன் அண்ணன் ஏசாவின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டான். இதனால் ஏசாவுக்கு பயந்து தன் உயிரைக் காப்பாற்ற சிரியா தேசத்திற்கு ஓடினான். போன இடத்தில் அவன் மாமனாரால் ஏமாற்றப்பட்டான். அவன் மாமனார் பத்து முறை அவன் சம்பளத்தை மாற்றினார். அதிக துக்கமான சூழ்நிலையிலும் அவன் தேவனைத் தேடினான். நிம்மதியற்ற சூழ்நிலையில் அவன் ஆண்டவரைப் பார்த்து சொன்னான் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை போக விடேன் என்று. (ஆதி-32:24-30)

அவ்விதமாகவே கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார். அவனுடைய மாமனாரும், சகோதரன் ஏசாவும் மனந்திரும்பினார்கள். அவனை ஏற்றுக்கொண்டார்கள் சஞ்சலம் நிறைந்த சூழ்நிலைகள் மகிழ்ச்சியான சூழ்நிலைகளாக மாறியது. அல்லேலூயா! என் அன்பு சகோதர சகோதரிகளே நீங்கள் செய்யாத தவறுகளுக்காக தண்டனைகளை

அநுபவித்துக்கொண்டிருக்கலாம். நீங்கள் நம்பினவர்கள் உங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கலாம். கண்ணீரின் பாதையில் ஆண்டவரை யாக்கோபைப் போல பற்றிக்கொள்ளுங்கள். விசுவாசத்தோடு ஆண்டவரிடம் விண்ணப்பம் செய்யுங்கள். என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை விடப்போவதில்லை என்று சொல்லி போராடி ஜெபியுங்கள். யாக்கோபை ஆசீர்வதித்த கர்த்தர் உங்களையும் நிச்சயமாய் ஆசீர்வதிப்பார். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!

"நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள், ஜெபத்திலே உறுதியாய் தரித்திருங்கள்" (ரோம-12:12)

## 3. தாவீது

வாழ்க்கையில் எத்தனையோ மேடு பள்ளங்களை தாவீது கடந்து வந்திருந்தான். ஒரு பக்கம் ஆண்டவர் அற்புதங்களை செய்து கொண்டிருந்தார். இன்னொரு பக்கம் பாவத்தினாலும், எதிரிகள் செய்த சூழ்ச்சிகளினாலும் மனங்கலங்கி தவித்துக்கொண்டிருந்தான். ஆனாலும் எல்லா சூழ்நிலைகளிலும் அவன் கர்த்தரை உறுதியாய் பற்றிக்கொண்டிருந்தான். "மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது. துர்சணப்பிரவாகம் என்னைப் பயப்படுத்தினது, பாதாளக் கட்டுகள் என்னை சூழ்ந்து கொண்டது, மரணக் கண்ணிகள் என்மேல் விழுந்தது, எனக்குண்டான நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு, என் தேவனை நோக்கி அபயமிட்டேன். தமது ஆலயத்திலிருந்து என் சத்தத்தைக் கேட்டார். என் கூப்பிடுதல் அவர் சந்நிதியில் போய் அவர் செவிகளில் ஏறிற்று" என்று (சங்கீ-18:74-6) அல்லேலூயா!

பிரியமானவர்களே, தாவீதைப் போல போராட்டம் நிறைந்த சூழ்நியையிலே நீங்கள் தவித்துக்கொண்டிருக்கலாம். ஆண்டவருடைய பிள்ளையாய் பரிசுத்தமாக வாழ நான் ஆசைப்படுகிறேன் ஆனாலும் ஐயோ, இதோ நான் விழுந்து போனேனே. சத்துருக்களால் சூழப்பட்டு எந்த நேரத்திலும் மரணம் ஏற்படக்கூடிய சூழ்நிலையில் நீங்கள் தவித்துக்கொண்டிருக்கலாம். தாவீதின் விண்ணப்பத்தைக் கேட்டு அவனை சகலத் தீங்குகளுக்கும் மீட்டு விடுவித்த கர்த்தர் உங்கள் உள்ளத்தை பார்க்கிற தேவனாக இருக்கிறார். தாவீது சொன்னான் "என் இருதயத்தில் அக்கிரம சிந்தைக் கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்கு செவிகொடார். மெய்யாய் தேவன் எனக்கு செவி கொடுத்தார். என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார்" என்று (சங்கீ-66:17-20)

ஆண்டவருக்கு உங்கள் உள்ளத்தைக் கொடுங்கள், அப்பொழுது கர்த்தர் உங்கள் ஜெபத்தையும் கேட்பார். தாவீதோடு கர்த்தர் இருந்தார். அவன் போகிற இடமெங்கும்

அவனுக்கு அனுகூலமாயிற்று அவன் புத்திமானாய் நடந்துகொண்டான் அதனால் நாளுக்கு நாள் விருத்தியடைந்தான். சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோட இருந்தார். (2-சாமு-5:10) தாவீது சொன்னான் நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறு உத்தரவு அருளினீர் என் ஆத்துமாவிலே பெலன் தந்து என்னை தைரியப்படுத்தினீர் என்று (சங்கீ-138-3)

என் அன்பு சகோதர, சகோதரிகளே, தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும், உண்மையாய் தம்மை நோக்கிக் கூப்பிடுகிற யாவருக்கும் கர்த்தர் சமீபமாய் இருக்கிறார். (சங்கீ-145:18) ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன் நீ என்னை மகிமைப் படுத்துவாய் (சங்கீ-50:15) என்ற வசனங்களின் படி கர்த்தர் உங்கள் ஜெபங்களையும் கேட்டு நீங்கள் விரும்புகிற ஆசீர்வாதங்களை நிச்சயமாய் உங்களுக்குத் தருவார். அன்னாள் தன் தேவைகளையும், கஷ்டங்களையும் ஆண்டவரிடம் சொல்லிவிட்டு அதன் பிறகு அவள் துக்கமுகமாய் இருக்கவில்லை. (1-சாமு-1:18) நீங்கள் ஒன்றுக் கவலைப்படாமல் எல்லாவற்றை குறித்தும் ஸ்தோத்திரத்தோடு கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள் அப்போது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும். (பிலி-4:6,7) ஆகவே எந்த சமயத்திலும் சகல விதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி அதன் பொருட்டு மிகுந்த மண உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். (எபேசி-6:18) எந்த சூழ்நிலையிலும் பயப்படாமலும், கலங்காமலும், சோர்ந்து போகாமலும், எல்லாக் காரியங்களையும் ஆண்டவரிடம் சொல்லிவிட்டு பவுல் அப்போஸ்தலனைப் போல மனம் ரம்மியமாய் இருங்கள். (பிலி-4:11)

நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும், நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் (எபேசி-3:20) நமக்குள்ளே கிரியை செய்கிற தேவன் தாமே வருகிற செப்டெம்பர் மாதம் முழுவதும் உங்களை அனைவரையும் கண்மனிப் போல பாதுகாத்து ஆற்றி, தேற்றி வெற்றி பெற்ற வாழ்க்கை வாழ உங்களை வழி நடத்துவாராக!

கர்த்தருடைய கிருபை உங்கள் அனைவரோடும் தங்கியிருப்பதாக!

கிறிஸ்துவின் பணியில்

அன்பு சகோதரன்

**ஸ்டாலின்**

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு, இந்த மலரின் மூலம் தங்களுடன் தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்வதஜல் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக

"வழிகளிலே நின்று பூர்வ பாதைகள் எவையென்று விசாரித்து, நல்ல வழி எங்கேயென்று பார்த்து அதிலே நடவுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்" (எரேமி–6:16)

இதை யார் சொல்லுகிறார் என்று பார்க்கும்போது விண்ணையும், மண்ணையும் சூரியனையும் சந்திரனையும் சகல நட்சத்திரங்களையும் சகல நாட்டு மிருகங்களையும் சகல காட்டு மிருகங்களையும் பறவைகளையும் பட்சிகளையும் கடலிலுள்ள மச்சங்களையும் உண்டாக்கின சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்.

ஒரு மனிதனுக்கு சமாதானமும் சந்தோஷமும் நிம்மதியும் மகிழ்ச்சியும் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதலும் கிடைக்க வேண்டுமென்று சொன்னால் அது கர்த்தருடைய வழியில் நடந்தால் மாத்திரமே கிடைக்குமென்று சர்வ வல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய வழிகள் எப்படிப்பட்டது என்று பாரக்கும்பொழுது,

நீதிமொழிகள் 3:17 சொல்லுகிறது அதின் வழிகள் இனிதான வழிகள் அதின் பாதைகள் எல்லாம் சமாதானம் நீதி–10:29 சொல்லுகிறது கர்த்தரின் வழி உத்தமர்களுக்கு அரண் அக்கிரமக்காரர்களுக்கோ கலக்கம். அரண் என்று பார்க்கும்பொழுது பாதுகாப்பு எதிரிகள் நம்மை எவ்வளவு தாக்கினாலும் அது உடைந்து போகாது. உறுதியாய் நம்மை பாதுகாக்கக் கூடியதாய் இருக்கிறது.

பிரியமாணவர்களே! உலகத்தில் எத்தனையோ வழிகள் உண்டு. அநேகர் வெவ்வேறு வழிகளை பின்பற்றி வருகிறார்கள். குறிப்பாக உலகத்திலே தத்துவ ஞானிகளாய் வாழ்ந்து மரித்த தத்துவ ஞானிகளுடைய வழிகளை இன்று அநேகர் பின்பற்றுவதை நாம் பார்க்கலாம். கம்யுனிஸ்ட் தத்துவத்தை உருவாக்கிய கார்ல் மார்க்ஸ் உடைய வழிகளையும், கிரேக்க தத்துவ ஞானி சாக்ரடீஸ் உடைய வழிகளையும், அரிஸ்டாடில் மற்றும் ஜார்ஜ் பெர்னாட்ஷா போன்றவர்களுடைய வழிகளையும் இன்றளவும் அநேகர் பின்பற்றி வருகின்றனர். ஆனால் இவர்களுடைய முடிவே மரண வழிகள் என்று வேதம் நமக்கு சொல்லுகிறது.

நீதி–14:12 மனுஷனுக்கு செம்மையாய் தோன்றுகிற வழியுண்டு அதின் முடிவோ மரண வழிகள். நீதி–14:27 சொல்லுகிறது கர்த்தருக்கு பயப்படுதல் ஜீவ ஊற்று அதனால் மரணக்கண்ணிகளுக்கு தப்பலாம் ஆதலால் கர்த்தரை நம்பி அவர் வழிகளில் நடக்கிறவனுக்கோ திடநம்பிக்கையுண்டு என்று நீதி–14:26–ல்

சொல்லப்பட்டிருக்கிறது (கர்த்தருக்கு பயப்படுகிறவனுக்கு திடநம்பிக்கையுண்டு அவன் பிள்ளைகளுக்கு அடைக்கலம் கிடைக்கும்) நமக்கு கற்றுக்கொடுக்கிறது.

அதனால்தான் தாவீது சொல்லுகிறான் சங்கீ–37:5 "உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர் மேல் நம்பிக்கையாயிரு, அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்" இதே அதிகாரம் 25–வது வசனத்தில் தாவீது சொல்லுகிறான் நான் இளைஞனாயிருந்தேன் முதிர் வயதுள்ளவனுமானேன், ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும் அவன் சந்ததி அப்பத்திற்கு இரந்து திரிகிரதையும் நான் காணவில்லை. சங்கீ–128–1 சொல்லுகிறது கர்த்தருக்கு பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்.

தாவீது மீண்டும் பார்க்கும்போது 1–ராஜா–15:5 தாவீது ஏத்தியனாகிய உரியாவின் சங்கதி ஒன்று தவிர கர்த்தர் தனக்கு கட்டளையிட்டதிலே தான் உயிரோடிருந்த நாளெல்லாம் அவர் பார்வைக்கு செம்மையானதை செய்து வந்தான். உதாரணமாக 1–நானா–29:17–ல் தாவீது கர்த்தரைப் பார்த்து சொல்லுகிறான் என் தேவனே நீர் என் இருதயத்தை சோதித்து உத்தமக் குணத்திலே பிரியமாய் இருக்கிறீர் என்று அறிவேன்.

கர்த்தர் தாவீதை என்று தெரிந்துகொண்டு அபிஷேகம் பண்ணினாரோ அன்றுமுதல் அவன் கர்த்தரின் வழியை விட்டு விலக வில்லை.
1–சாமு–16வது அதிகாரம் 13–வது வசனம் அப்பொழுது சாமுவேல், தைலக்கொம்பை எடுத்து, அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினான். அந்நாள் முதற்கொண்டு கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்திறங்கிருந்தார். ஆனால் தாவீதோ தான் இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்ட பின்பும் தனக்கு முன்பாக இஸ்ரவேலுக்கு அபிஷேகம் பண்ணப்பட்ட சவுல் ராஜா உயிரோடிருக்கும் நாள் வரைக்கும் அந்த சிம்மாசனத்தில் போய் அமர அவன் எண்ணினது இல்லை. ஏனென்றால் அவன் கர்த்தருடைய வழியை நன்கு அறிந்ததினாலே அவன் மனம் சம்மதிக்கவில்லை.

1–சாமு–16:19–ல் பார்க்கும் போது மீண்டும் அவன் ஆடு மேய்க்க சென்றுவிட்டான். கர்த்தர் வழி தன்னை புடமிடும் வரையிலும் கர்த்தருடைய கரத்திற்குள் அடங்கி நடந்தான். அதனால்தான் அவனை சமஸ்த இஸ்ரவேலுக்கு ராஜாவாக தேவன் உயர்த்தினார்.

அன்பானவர்களே! தாவீதைப் போல கர்த்தருடைய வழிகளிலே நாமும் ஒரு நாளிலே இப்போதிருப்பதைப் பார்க்கிலும் பலமடங்கு உயர்த்தப்படுவது நிச்சயமே.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

**கண்ணன் S.ஜெபராஜ்**

"நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே: தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே: கிறிஸ்துவுடனே கூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனே கூடப்பாடுபட்டால் அப்படியாகும். ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்"" (ரோம. 8:17-18).

ஒரு கிறிஸ்தவ விளையாட்டு வீரர் சிறுவயது முதல் நல்ல பயிற்சி எடுத்துவந்தார். நன்கு பயிற்சி பெற்றிருந்த அவருக்கு போட்டி நடக்கவிருக்கும் ஒரு வாரத்திற்கு முன்பு அவர் சென்ற கார் விபத்தில் சிக்கி கால் எலும்பு முறிந்ததால் போட்டியில் கலந்து கொள்ள முடியாமல் போனது. மிகுந்த பயிற்சிக்குப்பின் இப்படி ஆகிவிட்டதே என்று மிகவும் வேதனைப்பட்டார். ஆனால் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றோர் ஆனந்த கொண்டாட்டத்தில் அவர்களை அறியாமல் அவர்கள் குடித்திருந்த பானத்தில் போட்டியாளர்கள் எடுக்கக்கூடாத மருந்து சேர்க்கப்பட்டு, அவர்களை பரிசோதித்தபோது வீரர்களின் உடலில் மருந்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் வெற்றி பெற்றோர் வெட்கமும் வேதனையும் அடைந்தனர். இப்போதுதான் கிறிஸ்தவ விளையாட்டு வீரர் தேவன் தனக்கு ஏன் அந்த விபத்தை அனுமதித்தார் என்று உணர்ந்து கொண்டார். நீங்களும் நினைப்பது ஒன்று நடப்பது வேறொன்று: ஏமாற்றமும் தோல்வியும் என்று எண்ணுகிறீர்களோ! கலங்க வேண்டாம். வேதத்தில் அநேகருக்கு இப்படி நடந்திருக்கிறது. யோசேப்பு தன் பரிசுத்தத்தைக் காக்க வைராக்கியமாய் நின்றது அவனை சிறையில் சேர்க்குமென்று நினைக்கவில்லை. ஆனால் முடிவோ எகிப்து தேசம் முழுவதற்கும் இரண்டாவதாக ஆளுகை செய்யும் அதிகாரம் பெற்றவனாக தேவன் மாற்றினார். தானியேல் மூன்று வேளையும் ஜெபித்ததால் சிங்க கெபியில் போடப்பட்டான். முடிவோ புறஜாதியான ராஜா தேவனை பணிந்து கொள்ளும்படி மாற்றியது. யோனா கடலில் வீசப்பட்டு மூன்று நாள் மீனின் வயிற்றில் இருக்க நேர்ந்த போதும், உயிருடன் மீண்டு கர்த்தருடைய வார்த்தையை மீண்டும் அறிவிப்போம் என நினைக்கவில்லை. முடிவோ அவனுடைய பிரசங்கத்தில் ஒரு நகரமே விசுவாசத்திற்குள் வந்தது. பேதுரு தன் தொழிலைவிட்டு இயேசுவை பின்பற்றியபோது நினைக்கவில்லை, தன்னுடைய பிரசங்கத்தால் 3000 பேர், 5000 பேர் இரட்சிக்கப்படுவார்கள் என்று. இப்படி அநேக உதாரணங்களை வேதத்தில் பார்க்கமுடியும். அவர்கள் நினைத்தது ஒன்று, ஆனால் நடந்ததோ பெரிய காரியங்கள். அவர்கள் நினைத்தது தாங்கள் அவ்வளவுதான் இனி நன்மையான காரியங்கள் தங்களுக்கு நடக்காது என்று. ஆனால் தீமையானவற்றை தேவன் நன்மையாக மாற்றினார். "அன்றியும் அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்"" (ரோம. 8:28) என்று வேத வசனம் நம்மை தேற்றுகிறது. நமக்கு நடக்கிற காரியங்கள் யாவும் நன்மைக்கு ஏதுவாகவே நடக்கிறது என்ற விசுவாசம் நம்முடைய உள்ளத்தில் பெருகட்டும். தேவன் நம்முடைய இருளான பாடுள்ள சூழ் நிலைகளை மாற்றி, நமக்கு நன்மையாக செய்து முடிப்பார்: அவற்றை மகிமையாக மாற்றி தருவார். ஆமென்: அல்லேலூயா!

# 2017 ஆகஸ்டு மாத வேத வினாவுக்கு பதில்

1.லேவியரின் காணியாட்சியாகிய பட்டணங்களிலுள்ள வீடுகள் (லேவி25:32)

2. பரதேசியை போல தங்க வந்தவனை போலும் (25:35)

3. கொடூரமாய் (லேவி 25:43) 4. வருஷத்தொகை (25:50)

5. கர்த்தரின் கட்டளையையும் கற்பனைகளையும் கை கொள்ள வேண்டும் (லேவி 26:3)

6. துஷ்ட மிருகங்கள் (லேவி 26:3-6)

7.பலுகவும் பெருகவும் பண்ணுவார் (லேவி 26:9)

8.அவர் தேசத்தில் இருந்து புறப்படபண்ணினவர், நுகத்தடிகளை முறித்தார் , நிமிர்ந்து நடக்க பண்ணினார் (லேவியராகமம் 26:13)

9.சத்துருக்கள் (லேவி 26:15-17 )

10.கர்த்தருக்கு செவி கொடாதவர்களுக்கு (லேவி 26:18,19)

11. பிள்ளையற்றவர்களாக்கும், மிருக ஜீவன்களை அழிக்கும், ஜனங்களை குறைந்து போக பண்ணும் (லேவி 26:22)

12.திரும்ப நிறுத்து கொடுப்பார்கள் (லேவி 26:26)

13. தமக்கு செவி கொடாத ஜனங்களின் (26:27-31)

14. அசைகிற இலைகள் (லேவி 26:36)

15.தங்கள் அக்கிரமங்கள் மற்றும் பிதாக்களின் அக்கிரமத்தையும் (லேவி 26:39)

## 2017 ஆகஸ்டு மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சாந்தி
Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. ஷீபா பிரசாத்
Sis. மெர்ஸிலின் தயா இயேசு ரெத்தினம்
Sis. நகோமி ஜான்ஸன்
Sis. நித்யா ஜோன்ஸ்

Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. பத்மினி வர்கீஸ்

Bro. ஜாண்
Bro. ஜாண்ஸன்
Bro. கண்ணன் ஜெபராஜ்

**தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.**

**ரோமர் 14:17**

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. மோனிகா ஷெர்லின்
செல்வி. லிடியா ஆரோக்கியதாஸ்
செல்வி. சாராள் சத்தியநாதன்
செல்வி. ஹேனா மினோரா
செல்வி. ஜெனோலின் ஜெரின்
செல்வி. அறிவழகி கலிய மூர்த்தி
செல்வி. தீபா ராஜன்
செல்வி. பிளஸ்சி பியூலா வில்சன்

செல்வன். கிதியோன் செங்குட்டுவன்
செல்வன். ஆன்டனி கமலதாசன்
செல்வன். அமீஸ் டேவிட்
செல்வன். ஞானசிகாமணி ஆசீர்வாதம்
செல்வன். சந்தோஷ் ஜெயகுமார்
செல்வன். மிருதுன்ராஜ் சதீஷ்குமார்
செல்வன். சுதன் தேவதாஸ்
செல்வன். விக்டர் செங்குட்டுவன்

செல்வன். ஜாண் ஜோஸ்வா மில்லர்
செல்வன். ஆரோன் டேனியல்
செல்வன். கெவின் அஸ்ரேய் ஆரோக்கியராஜ்
சகோதரி. சவரியம்மாள் சத்தியநாதன்
சகோதரி. ஜரின் நிஷா கிரன்குமார்
சகோதரி. பியூலா கலை செல்வி
சகோதரி. செலின் சோபினா மேரி டேவிட்
சகோதரி. ஷீலா இன்பராணி பக்தராஜ்
சகோதரி. சுபா ஸ்டீபன்
சகோதரி. அமுதா சுகுமாரன்
சகோதரி. ஜரின் செபாஸ்டின் ஜோசப்
சகோதரி. மரியா ஜாண்போஸ்கோ
சகோதரி. பெர்னத் அல்ஜியா மேரி தாமஸ்
சகோதரி. அனிதா ஜஸ்டஸ் விஜயகுமார்

சகோ. மணிராஜ்
சகோ. தினேஷ் குமார்

**உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)**

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. அருள்மணி
திருமதி & திரு. ஜோசப் பாபுராஜ்
திருமதி & திரு. வில்சன் செல்லையன்
திருமதி & திரு. ராஜா ரவிச்சந்திரன்
திருமதி & திரு. ரவிஜாண் பீட்டர்
திருமதி & திரு. அற்புதராஜ்
திருமதி & திரு. மார்க் ஆன்டனி
திருமதி & திரு. ஃபிராங்கிளின்

# 2017 செப்டம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/09/2017 | சகோ. ஜீப்லின் ஜோசப் | |
| 10/09/2017 | சகோ. ஜீப்லின் ஜோசப் | |
| 17/09/2017 | சகோ.பிரசாத் | சுகோ.ஜெபராஜ் |
| 24/09/2017 | சகோ.பால் பாண்டியன் | சகோ. கிறிஸ்டோபர் |

## *வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை*

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/09/2017 | சகோ. ஜீப்லின் ஜோசப் | |
| 08/09/2017 | சகோ. ஜீப்லின் ஜோசப் | |
| 15/09/2017 | சகோ. ஜீப்லின் ஜோசப் | |
| 22/09/2017 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 29/09/2017 | சகோ. ஆரோக்கிய தாஸ் | சகோ.ஜெயசேகர் |

| சிறப்பு தேவ செய்தி சகோ. ஜீப்லின் ஜோசப் அவர்கள் கூட்டங்கள் | | |
|---|---|---|
| நாள் | இடம் | நேரம் |
| 02/09/2017 | சபையின் ஜெப வீடு | காலை 9:00 முதல் 1:00 வரை |
| 03/09/2017 | சபையின் ஜெப வீடு | மாலை 6:30 முதல் 8:30 |
| 04/09/2017 | சபையின் ஜெப வீடு | மாலை 6:30 முதல் 8:30 |
| 05/09/2017 | சபையின் ஜெப வீடு | மாலை 6:30 முதல் 8:30 |

11/09/2017 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை, இடம்,அபு ஹலிஃபாவில் உள்ள
சகோதரி ஜீவா ஃபிராங்ளின் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்
(வேத வினா பகுதி லூக்கா புத்தகத்தில் இருந்து )

14/09/2017 அன்று முழு இரவு ஜெபம் , இடம் , பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி
நேரம் இரவு 10 மணி முதல் அதிகாலை 2:00 மணி வரை

29/09/2017 அன்று மாலை 6.30 மணி அளவில் வாலிப ஐக்கிய கூடுகை இடம், ஜெபவீடு
(வேத வினா பகுதி எரேமியா புத்தகத்தில் இருந்து )

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1. கர்த்தர் எதினால் சத்துருக்களின் தேசத்தில் தங்களை கொண்டுபோனார் என்பதை அறிக்கையிட வேண்டும் ?

2.அக்கிரமங்கங்களை அறிக்கையிட்டு, தண்டனையை, ஒத்துக்கொண்டால் கர்த்தா எதை அபத்தமாக்கமாட்டார் ?

3. பொருத்தனை பண்ணபட்டவர்கள் யாருக்குரியவர்கள்?

4. 5 முதல் 20 வயதிற்குட்பட்ட ஆண்பிள்ளைகளின் மதிப்பு என்ன ?

5. 60 வயது முதல் அதற்குமேற்பட்ட பெண்பிள்ளைகளின் மதிப்பு என்ன ?

6. பலியிடத்தக்க மிருகத்தை பொருத்தனை பண்ணினவன்அவைகளை என்ன செய்ய கூடாது ?

7. சாபத்தீடான வயல் யாருக்கென்று நியமிக்கப்படும்?

8. இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லும்படி கர்த்தர் யாரிடம் கட்டளையை கொடுத்தார் ?

9. தலையீற்றானவைகள் யாருடையது ?

10. கர்த்தருக்கு பரிசுத்தம் என்று நேர்ந்து கொண்ட வீட்டை ஆசாரியன் எதற்கு தக்கதாக மதிப்பான் ?

11. தசமபாகம் கர்த்தருக்கு எப்படிபட்டது?

12.விலைக்கு வாங்கி கர்த்தருக்கு நியமிக்கபட்ட வயல் யூபிலி வருஷத்தில்

யாரை சேரும் ?

13. எதை பொருத்தனை பண்ணினால் அதை ஆசாரியனுக்கு முன் நிறுத்தவேண்டும் ? 14. கர்த்தர் யாருடைய கண்களுக்கு முன்பாக இஸ்ரவேலரை எகிப்திலிருந்து புறப்பட பண்ணினார் ?

15. கர்த்தர் எப்பொழுது ஜனங்களை கைவிடவும், வெறுக்கவும்மாட்டார் ?

விடைகளை வருகின்ற 20-09-2017 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapps ATC Seithi malar குழுமத்தின் மூலம் அனுப்பவும் # 66015503 ) விடைகளை வேதாகமத்தில் லேவியராகமத்தில் அதிகாரம் 26,27.ல் இருந்து பதிலைத் தேடுங்கள் )

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –மத்தேயு 7:7

# இலக்கை நோக்கித் தொடர்கிறேன்,
# “இலட்சியம் என் இயேசுவே”

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கி தொடர்கிறேன். (பிலிப்–3:14) இரட்சகராகிய இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த மூன்றரை ஆண்டுகளும் பலவிதமான நெருக்கடிகள், பாடுகள், நிந்தனைகள், பரியாசங்கள், சோதனையின் மத்தியில்தான் ஊழியம் செய்தார். தேவன் இந்த உலகத்திற்கு எதற்காக அனுப்பினாரோ அதை முழுமையாக செய்து அவருடைய இலட்சியத்தை நிறைவேற்றினார். தேவனை தம் மூலம் இந்த உலகத்திற்கு வெளிப்படுத்தினார். மரணபரியந்தம் தம்மை தாழ்த்தினார். யோவான்–16:33–ல் கூறுகிறார் உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். சீஷர்களை ஊழியத்திற்கு அனுப்பும் போது ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறது போல இதோ உங்களை அனுப்புகிறேன். மத்–10:16 என்று கட்டளை கொடுக்கிறார்.

தம்முடைய சீஷர்கள் கூட இரத்த சாட்சியாக இந்த மண்ணில் விதைக்கப்பட்டார்கள். இயேசு கிறிஸ்து தங்களுக்கு கொடுத்த இலக்கை நிறைவு செய்தார்கள். கிறிஸ்து நமக்கு கற்றுக்கொடுப்பது நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றக்கொள்ளுங்கள் என்றார். மத்–11:29. கிறிஸ்தவ வாழ்க்கை பாடுகளும், பலவிதமான கஷ்டங்களும மத்தியில் ஓடுகிற கூட்டம் என்பதை நமக்கு தெரியப்படுத்துகிறார். இன்றும் கூட மிஷனெரிகள் சுவிசேஷத்தின் நிமித்தம் இந்த மண்ணில் தினமும் கோதுமை மணிகளாக விதைக்கப்படுகிறார்கள்.

தங்களின் அழைப்பை பரிபூரணப்படுத்தி ஓட்டத்தை முடித்து தேவ இராஜ்ஜியத்தை சுதந்திரத்துக்கொள்ளுகிறார்கள். இன்றும் அனேக ஊழியக்காரர்கள் உண்மையும், உத்தமத்தோடு தேவனுடைய அழைப்பை உபத்திரவத்தின் மத்தியில் செய்கிறார்கள். அதற்கு மாறாக பணம், புகழ்,பதவி என்கிற மோகத்தில் சிக்கி பலவிதமான இச்சைகளால் இழுப்புண்டு அரசியல் நடத்துவதை கண்களால் காணும்பொழுது வேதனை அடைகிறோம். தாங்கள் செய்கின்ற ஊழியத்தில் அல்லது சபையில் விரும்பும் பதவி கிடைக்காவிட்டால் விசுவாச வார்த்தைகளால் வசப்படுத்தி சபையை விட்டு பிரித்து எதற்காக ஓடுகிறோம் என்பதை மறந்து போகிறார்கள். உல்லாசமான வாழ்க்கை மட்டும் போதும், உபத்திரவம் வேண்டாம் என்கிறார்கள்.

கிறிஸ்துவின் பணியில்,
அன்பு சகோதரன்,
S.ஆல்பர்ட்

## "நீங்கள் போய் கனி கொடுக்கும்படி நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவா. 15:16).

இந்த கடைசி நாட்களில் நாம் இரண்டு விதத்தில் கனி கொடுக்க வேண்டுமென்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். முதலாவது நம்முடைய சுபாவத்தின் மூலமாக கனி கொடுக்க வேண்டும். இரண்டாவதாக அழிந்து போகிற ஆத்துமாக்களை தேவனுடைய ராஜ்யத்திற்கு வழி நடத்துவதன் மூலமாக கனி கொடுக்க வேண்டும்.

தேவனாகிய கர்த்தர் பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவி தமான விருட்சங்களையும் தோட்டத்திலே முளைக்கப் பண்ணினதாக ஆதியாகமத்திலே வாசிக்கிறோம். இதிலே தோட்டம் என்று சொல்வது தேவனுடைய சபையைக் குறிக்கிறது. பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்கள் என்பது சபையிலுள்ள நானும் நீங்களும் மற்றவர்களுக்கு நல்ல ஆவிக்குரிய ஆகாரத்தை கொடுக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். தேவனுக்கு ஊழியம் செய்கிற நம்மிடம் அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்ற தேவனுக்கு பிரியமான தெய்வீக சுபாவங்கள் தான் நம்மிடம் காணப்பட வேண்டுமேயொழிய பிசாசுக்குப் பிரியமான மாம்சத்திற்கேதுவான குணங்கள் (சுயங்கள்) நம்மிடம் காணப்படக் கூடாது. தேவனுடைய சபையிலுள்ளஒருவர் மற்றவர்க்கு நித்திய ஜீவனை அளிப்பதற்கேதுவான ஜீவ விருட்சமாக இருக்க வேண்டும். இவைகள் தான் மற்றவர்களுடைய ஆவிக்குரிய பசியை ஆற்றும் நல்ல ஆகாரமாகும்.

தேவன் ஆபேலையும் அவன் காணிக்கையாகிய ஊழியத்தையும் அங்கிகரித்து கனம் பண்ணினார். காரணம்: ஆடு மேய்த்தல் என்பது ஆத்துமாக்களை பராமரிப்பதை காட்டுகிறது. ஆபேலுக்கு ஒரு மேய்ப்பனின் இருதயம் காணப்பட்டது. ஆனால் காயின் அப்படியல்ல. காயின் நிலத்தை பயிரிடுகிறவனாய் இருந்தான். காயின் தேவ னால் சபிக்கப்பட்ட பூமிக்கு சேவை செயது கொண்டிருந்தான். தேவன் விரும்புகிற மற்றவர்கள்மேல் கரிசனையுள்ள இருதயம் காயினுக்கு இருக்கவில்லை. அதனால் தான் தேவன் அவனிடம் உன் சகோதரனாகிய ஆபேல் எங்கே என்று கேட்டபோது என் சகோதரனுக்கு நான் காவலாளியோ என்று அவருக்கு பதில் சொன்னான்.

அழிந்து போகிற ஆத்துமாக்களை இரட்சிப்புக்குள் வழி நடத்துவதற்கு அதாவது தேவனுடைய ராஜ்யத்துக்குள் வழி நடத்துவதற்கு வாஞ்சை இல்லை என்று சொன்னால் சபையில் இருக்கிறேன் என்பதில் ஒரு பிரயோஜனமும் இல்லை. நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் கனியற்றவர்களாக இருப்பதை தேவன் விரும்புவதில்லை. தேவன் நம்மை உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்தினால் மட்டுமல்ல ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதிக்கிறார். யோவா. 15:16 –ல் "நீங்கள் என்னை தெரிந்து கொள்ளவில்லை. நான் உங்களை தெரிந்து கொண்டேன்: நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்"" என்று இயேசு கிறிஸ்து சொல்லி இருக்கிறார். நாம் கனி தந்து பெருக வேண்டும் என்று தேவன் நம்மீது வாஞ்சையாய் இருக்கிறார். யோசேப்பு கனிதரும் செடி: அதின் கொடிகள் சுவரின் மேல் படரும் என்று வேதத்தில் வாசிக்கிறோம். இதேபோல் நாமும் கனிதரும் செடியாயிருந்து, நம்மை சுற்றி பசியாயிருப்பவர்களை போஷிக்கும்படி நம்முடைய கொடிகள் சுவரின் மேல் படர தேவன் தாம் நமக்கு உதவி செய்வாராக. ஆமென்.

## பேராயர் வேதநாயகம் சாமுவேல் அசரியா (1874 – 1945)

திருநெல்வேலி தென் சீமையில் பிறந்த வேலாயுதம் என்ற தாமஸ் வேதநாயகம் என்பவரின் மகனாக 17.08.1874–ல் பிறந்தார் அசரியா. சிறுவனாக இருந்தபோதே தந்தையை இழந்த அசரியா தாயின் பராமரிப்பில் வளர்ந்து, நல்ல ஜெப வீரனாகவும். வேதத்தை நன்கு கற்றறிந்தவராகவுதட இருந்த பண்ணைவிளை வாலிபன் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் பட்டம் பெற பயின்றார். பின்னர் கிறிஸ்தவ வாலிப சங்கத்தின் (லுஆஊயு) காரியதரிசியாக நியமிக்கப்பட்டபோது மிஷனெரியாக பணிசெய்த உவாக்கர் ஐயர் அவர்களின் ஊழியத்தினாலும், செய்தியினாலும் அசரியா, மதுரம், பரமானந்தம் போன்ற வாலிபர்கள் தேவ ஊழியம் செய்ய அதிகமாக ஊக்குவிக்கப்பட்டனர்.

ஒரே ஒரு வார்த்தை ஒரு பிரசங்கியாரை ஒரு மிகப்பெரிய மிஷனெரி தலைவராகவும். முதல் இந்திய பேராயராகவும் (திருநெல்வேலி திருமண்டலம்) மாற்றியது என்று சொன்னால் அது மிகையாகாது.

அது ஒரு மாபெரும் மிஷனெரி மாநாடு. அலைகடல் என மக்கள் கூட்டம் மான்கள் நீரோடைகளைத் தேடித் தவிப்பது போல பேராயர் அசரியாவின் இறை வார்த்தைக்காக மக்கள் ஆவலாய் காத்துக்கொண்டிருந்தனர்.

இறைச் செய்தியின் இனிய நேரம். வேகமாகப் பறக்கும் அம்புகளைப் போல இறை பணியின் அவசியத்தையும் தேவைகளையும் அனைவர் உள்ளத்திலும் பாயச் செய்தார் அசரியா. இறைப் பணியின் வாஞ்சையைப் பற்றி எரிந்த போது....

மிஷனெரிப் பணிக்காக அர்ப்பணிப்போர் உங்களில் எத்தனை பேர்? அவர்கள் முன்னே வரலாம் என்று அசரியா அறைகூவல் விடுத்தார்.

திடீரென்று புயலெனச் சீறி எழுந்தான் ஓர் வாலிபன் நீங்களே ஏன் ஒரு மிஷனெரியாகச் செல்லக்கூடாது?

அசரியாவின் உள்ளம் உடைந்தது. கதறி அழ ஆரம்பித்தார். இயேசுவின் கைகளில் இதயத்தைக் கொடுத்தார். தோர்ணக்கல் என்ற பகுதியில் அவர் தன் கால்களைப் பதித்தார். அது கர்த்தரின் பூமியாகக் கனிந்தது. 8000 கிறிஸ்தவர்கள் என்ற எண்ணிக்கை 226000 ஆக உயர்ந்தது.

சென்னை பேராயர் ஒயிட் ஹெட் அவர்கள் அசரியாவின் ஊழியத்தில் காணப்பட்ட நேர்மை, உண்மை, தைரியத்தைக் கண்டு அசரியாவுக்கு தோர்ணகல்லில் மிஷனெரியாக போவதற்கு முன் உதவி போதகர் அபிஷேகம் கொடுத்து அனுப்பினார்.

தோர்ணக்கல்லின் மிஷனெரிப் பிஷப்பாக சில வருடங்களில் அநேக ஆத்துமாக்களை இரட்சிப்பக்கள் நடத்தி 1944-ல் 240000 ஆத்துமாக்களையும், 2152 CSI திருச்சபைகளையும், இந்திய குருமார் 167, சபை ஊழியர்கள் 1874 ஆகவும் தோர்ணக்கல் CSI பேராயம் வளர்ந்து நின்றது.

பிஷப் அசரியா கட்டின ஆலயத்தில் தரையில் தான் அமரவேண்டும். கீர்த்தனைகள், மற்றும் ஆராதனை முறைமைகளில் சில மாற்றங்களை தெலுங்கில் செய்து பின்பற்ற உதவினார்.

மாபெரும் மிஷனெரி இயக்கத்தின் விடிவெள்ளி முதல் இந்திய பேராயர் என்று போற்றப்பட்ட இவர் IMS, NMS, CSI போன்ற மாபெரும் நிறுவனங்கள் உருவாக அடித்தளமிட்டார்.

அஞ்சா நெஞ்சத்துடன் அயராது உழைத்தவர், கிறிஸ்துவின் உத்தமத் தொண்டன், கிறிஸ்தவர்களின் வழிகாட்டி, அர்ப்பணிப்பின் மகுடம் என்ற பெரும் புகழுடைய அசரியா ஜனவரி 1-ல் 1945-ம் ஆண்டு கோதுமை மணியானார்.

வர் அன்று விதைத்த மிஷனெரி விதைகள் இன்று ஆயிரமாயிரமாக எழுப்புதலை ஏற்படுத்தி இருப்பதை இன்று கண்களால் காண முடிகிறது. அது மட்டுமல்லாது திருநெல்வேலி திருமண்டலத்தின் கீழ் இன்று 687 ஆலயங்களுக்கு மேலாகவும், பலநூறு போதகர்களும் மற்றும் லட்சக்கணக்கான விசுவாசிகளும் உருவாகக் காரணமானவர் என்று சொல்லலாம்.

நம்முடைய வாழ்க்கையில் தேவன் தினமும் வேத வசனங்கள் மூலமாகவும், அநேக ஊழியக்காரர்கள் மூலமாகவும் நம்மோட கூட பேசி வருகிறார். நாமும் அவர் வார்த்தைக்கு செவி கொடுப்போம். தேவ சித்தம் செய்ய விரைந்திடுவோம்.

தீர்மானங்கள் திருப்புமுனையாகட்டும், கர்த்தர் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்

**தியானத்திற்காக:** யாத்-15:26 “நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்கு செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவி கொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன், நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்”

**மண்ணில்: 17.08.187**

**விண்ணில்: 1.1.1945**

**ஊர்: வெள்ளான் வினை**

**நாடு: இந்தியா**

**தரிசன பூமி: தோர்ணக்கல், இந்தியா**

**தொகுப்**

**கிறிஸ்துவக்குள் அன்பு சகோதரன்**

**சுகுமாரன்**

*நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்;*

*ஏசாயா 54:3*

## ஜெபத்தில் தொய்வு வேண்டாம்

ஜெபத்தில் ஒரு போதும் தொய்வு ஏற்பட விடாதிருங்கள். இரண்டு மூன்று நாட்கள் தொடர்ந்து நீங்கள் ஜெபிக்காமல் விட்டுவிட்டால், பின்பு ஜெபிப்பதற்கு கடினமாக இருக்கும். ஜெப ஆவியை தட்டி எழுப்ப நேரமாகும். கித்தார் என்ற இசை கருவியை வாசிக்காமல் மூலையில் போட்டு விடடீர்கள் என்றால் அதில் உள்ள நாண்கள்(நரம்புகள்) தளர்ச்சியாகி சுருதி இறங்கிவிடும். பின் அதிக வரநெ செய்ய அதிக நேரமாகும். ஜெபமும் அப்படித்தான். சில தண்ணீர் அடிபம்புகளை பார்த்திருக்கிறேன், அடித்து கொண்டே இருந்தால் தண்ணீர் கொட்டி கொண்டேஇருக்கும். ஆனால் நீண்ட நேரம் விட்டுவிட்டால் தண்ணீர் பம்பின் ஆழத்திற்குள் போய்விடும். அடித்தாலும் தண்ணீர் வராது. பின்பு கஷ்டப்பட்டு பிரயாசபட்டு, தண்ணீர் ஊற்றி அடித்தால்தான் தண்ணீர் தொடர்ந்து வரும். கிறிஸ்துவுக்குள், பிரியமுள்ள தேவ பிள்ளைகளே! நீங்கள் ஜெபத்தை நிறுத்தி விடுவீர்களானால். பின்பு அவசர நேரத்திற்கு, ஆபத்து சமயங்களுக்கு ஜெபிக்க முடியாமல் போகும், பல நாட்கள் ஜெபிக்கவில்லையே, என்ற குற்ற உணர்வும் உங்களை வாட்டும், அவிசுவாசமும் பிடித்துக் கொள்ளும். காலையில் எழுந்ததும் முன்பெல்லாம் எப்படி கடிகாரத்திற்கு சாவி கொடுத்து தொடர்ந்து ஓட வைப்பது போல, ஜெப ஜீவியத்தை முடுக்கி விட்டு ஜெபத்தின் பாதையில் ஓடுவீர்களாக. நீருற்றில் இருந்து தண்ணீர் பொங்கி கொண்டு இருப்பது போல. உங்கள் உள்ளத்திலும் ஜெப ஆவி பொங்கி வழிந்து கொண்டே இருக்கட்டும். அப்பொழுது நீங்கள் சிறந்த ஜெப வீரனாக, வீராங்கனையாக விளங்குவீர்கள். எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்(லூக்கா 21:26) 17. இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். 18. எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்;(1தெச-5:17,18)

## அபத்தம் பேசாதீர்கள்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம் அன்பான சகோதர சகோதரிகளே இந்த நேரத்திலும் சீர்திருத்தம் செய்கிற பரிசுத்த ஆவியானவர் நம்முடைய எல்லைகளை நிரப்பும்படி விரும்புகிறார். விசேஷித்த விதமாக நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிற இந்த நாவை கர்த்தருடைய ஆவியானவர் சீர்திருத்தும்படி விரும்புகிறார்.

ஜீவனும் மரணமும் உங்கள் நாவின் அதிகாரத்திலிருக்கிறது. கர்த்தர் கிருபையாய் கொடுத்திருக்கிற ஈவாய் கொடுத்திருக்கிற இந்த நாவை, அநேக நேரங்களில் நாம் துஷ்பிரயோகம் பண்ணுகிறதினிமித்தமாக நம்முடைய குடும்பத்தில் முதலாவதாக ஆசீர்வாதக்குறைச்சல் உண்டாகிறதாயிருக்கிறது. இப்படிப்பட்ட காரியத்தில் பரிசுத்த ஆவியானவர் ஒரு பெரிய மாற்றத்தைக் கொடுக்க விரும்புகிறார்.

ஏசாயா-59:4 இப்படிச் சொல்லுகிறது " நீதியைத் தேடுகிறவனுமில்லை, சத்தியத்தின்படி வழக்காடுகிறவனுமில்லை. மாயை நம்பி அபத்தமானதைப் பேசுகிறார்கள். இதிலே நாம் குறிக்க வேண்டிய வார்த்தை என்னவென்றால், "மாயை நம்பி அபத்தமானதைப் பேசுகிறார்கள்" அபத்தமானது என்றால் "Empty words" அந்த வார்த்தைகளால் அவர்களுக்கும் பியோஜனமில்லை. அவர்களை சுற்றி இருக்கிறவர்களுக்கும் பியோஜனமில்லை. ஏனெனில் அவர்களுடைய இருதயமானது மாயையை நம்பியிருக்கிறது. அப்படி அபத்தமான வார்த்தைகளைப் பேசும்பொழுது அங்கே கர்த்தருடைய வார்த்தை தெளிவாய் சொல்லுகிறது. தீமையைக் கர்ப்பந்தரித்து அக்கிரமத்தை பெறுகிறவர்களாய் இருக்கிறோம். மாயையான, அபத்தமான, பியோஜனமற்ற, இரக்கமற்ற, சுயநலம் வாய்ந்த வார்த்தைகளை நாம் பேசும்பொழுது அங்கே நாம் அக்கிரமத்தை பெறுகிறவர்களாய் இருக்கிறோம்.

கர்த்தரைக் கனப்படுத்த வேண்டிய இடத்தில், கர்த்தரை நீங்கள் கனப்படுத்தவீர்களென்றால், அதே இடத்தில் கர்த்தருடைய ஆவியானவர் உங்களைக் கனப்படுத்துகிறவராயிருக்கிறார். கர்த்தரை நீங்கள் கனப்படுத்தும்படி நீங்கள் எழும்பும் பொழுது, நீதிமானை ஆசீர்வதிக்கும்படி பிதாவாகிய தேவன் எழுந்தருளி தம்முடைய உத்தம ஆசீர்வாதத்தினால் உங்களுடைய குடும்பத்தை நிரப்புவதற்கு அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். ஆமென்

அன்பு சகோதரி

**நித்தியா ஜோன்ஸ்**

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு













## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஜெகநாதன்

23917287 - 66889535

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 66857827

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . தயா இயேசுரெத்தினம்

23924262 - 94974732

வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only